3. உரிமைப் பிரச்சினை.

சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்குமாறு சி.ஐ.டி. துறையினருக்கு காவல் துறைக் கண்காணிப்பாளர் அனுப்பிய குறிப்பாணை குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றிய செய்திகளைச் சேகரிக்குமாறு சி.ஐ.டி. துறையினருக்கு காவல் துறைக் கண்காணிப்பாளர் அனுப்பிய குறிப்பாணை குறித்து, 26—2—1981 அன்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ம. சங்கரலிங்கம், திரு. க. இராமமூர்த்தி ஆகியோர் எழுப்பிய உரிமைப் பிரச்சினையைக் குறித்து அரசின் விளக்கத்தை மாண்புமிகு முன்னவர் அளிப்பார்.

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. இராமமூர்த்தி அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர் திரு. ம. சங்கரலிங்கம் அவர்களும் கொண்டு வந்த உரிமைப் பிரச்சினை மீது அரசு தரப்பில் விளக்கத்தை நான் தர விரும்புகிறேன்

சி.ஐ.டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் அவர்கள் கீழ்க்கண்ட விளக்கத்தைத் தந்திருக்கிறார்கள் :—

“ 31—1—1981 அன்று சி.ஐ.டி. துறை அனுப்பிய இரகசியக் குறிப்பாணையில் இரு அவைகளிலும் விவாதிக்கப்படுகின்ற பிரச்சினைகளை உடனுக்குடன் தெரிந்து கொண்டு தேவையான முழுமையான தகவல்களை மாநிலத்தின் எந்த இடத்தோடும் தொடர்புகொண்டு பெற்று அரசுக்கு அவைகளை உண்மையில் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் தான் பிறப்பிக்கப்பட்டது. எந்த ஒரு கட்சியையோ, அல்லது எந்த ஒரு மாண்புமிகு உறுப்பினரையோ தனிப்பட்ட முறையில் கண்காணிக்கும்படி உத்தரவிடப்படவில்லை.

அவையில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், தகவல்களையும் சேகரிப்பதற்குக் காரணமாக இருக்கும் கருத்துக்களை உடனுக்குடன் தெரிவிக்குமாறு உரியவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தது. பல சமயங்களில் சேகரித்துத் தருவதற்குப் போதிய அவகாசம் கிடைக்காதது ஒரு பெரிய குறையாக இருந்துவிடுகிறது. குறிப்பாக, சட்டம், ஒழுங்கு போன்ற விஷயங்களில் உடனுக்குடன் சரியான விவரங்களை வேகமாகச் சேகரிப்பது அத்தியாவசியமாகின்றது. இந்த நடவடிக்கை அவையின் உரிமையை பாதிக்கக் கூடும் என்று சி.ஐ.டி. துறை கிஞ்சித்தும் எதிர்பார்க்கவில்லை. அப்படிப் பாதிக்கப்படுவதாகக் கருதக்கூடும் என்ற ஐயம் எழுந்ததுமே அந்தக்

குறிப்பாணை திரும்பப் பெறப்பட்டது. இனி இம்மாதிரி எதுவும் நிகழாது என்று துறை உறுதி கூறுகிறது. எதிர்பாராத விதமாக தவறான ஐயத்தை இந்தச் செயல் ஏற்படுத்தியதற்கு சி.ஐ.டி. துறை தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது."

என்று சி.ஐ.டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் கூறியிருக்கிறார். உண்மையிலே யாரும் அவையின் அனுமதிச் சீட்டைப் பெறவில்லை. யாரும் அந்த ஆணையின்படி வந்திருந்து கவனிக்கவும் இல்லை. இனி இந்த மாதிரியாக நடைபெறக்கூடாது என்றும், நடைபெற்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்றும் சி.ஐ.டி. துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இந்த விளக்கத்தை ஏற்றுக்கொண்டு இந்தப் பிரச்சினையை இதோடு விட்டுவிட மாண்புமிகு உறுப்பினர்களும், மேலவைத் தலைவராகிய தாங்களும் உதவுமாறு அரசின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இது குறித்து என்னுடைய தீர்ப்பைப் பின்னர் அறிவிக்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, தாங்கள் தீர்ப்பு கூறுவதற்கு முன்னால் இப்போது அரசு தந்திருக்கிற விளக்கத்தைப்பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். அந்த விளக்கம் அந்தக் குறிப்பாணையைவிட மோசமாக இருக்கிறது. அந்தக் குறிப்பாணையின் மூலமாக பறிக்கப்பட்ட உரிமையைவிட அதிகமான உரிமை இந்த விளக்கத்தின் மூலமாகப் பறிக்கப்படுகிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இதை நாம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் இதை விவாதிக்க ஆரம்பிக்கக் கூடாது.

திரு. ம. சங்கரலிங்கம்: குறிப்பாணையின் மீது அளித்த விளக்கத்தின் பேரில் எங்களுடைய கருத்தை அறிய வாய்ப்புத் தர வேண்டும். இந்த விளக்கத்தின் மீது உரிமைப் பிரச்சினை எழுப்ப வேண்டிய நிலை உருவாகியிருக்கிறது.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் ஓர் உரிமைப் பிரச்சினையை வழக்கப்படி கொடுத்திருக்கிறார். அதுபற்றி தம்முடைய கருத்தை அவர் தெரிவித்துவிட்டார். அதற்குப் பிறகு சர்க்காரின் கருத்தைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. எஞ்சியிருப்பது தலைவரின் தீர்ப்பு ஒன்றுதான். ஆகவே மேற்கொண்டு விவாதம் ஆரம்பிப்பதன் மூலமாக புதிய முறையைக் கடைப்பிடித்தால், இதில் என்ன நியாயம் இருக்கிறது?

திரு. ம. சங்கரலிங்கம்: புதிய மரபை நான் உருவாக்க விரும்பவில்லை. இதை நான் விவாதமாக்கவும் விரும்பவில்லை. ஆனால் உங்களுடைய தீர்ப்புக்குப் பிறகு நான் பேசக் கூடாது என்பதால், இப்போதே தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர வாய்ப்புக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தமக்குள்ள குறையை ஏற்கெனவே சொல்லியாகிவிட்டது.

திரு. ம. சங்கரலிங்கம்: சொல்ல நேரம் தந்தால் சொல்ல முடியும். இல்லையென்றால் எழுதித் தருகிறேன்.

4. அறிவிப்பு.

ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மீனாட்சிசுந்தரம் ஓர் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார். அது நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

(முற்பகல் 11-00)

5. கவன ஈர்ப்பு.

(1) பள்ளிக் கல்வி இயக்குநர் நடுநிலைப் பள்ளிகளிலுள்ள எட்டாம் வகுப்பை நீக்கி உயர்நிலைப் பள்ளியில் வைக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருவதால் நடுநிலைப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் எட்டாம் வகுப்பு சொல்லித் தரும் இடைநிலை ஆசிரியர்கள் பாதிக்கப் படுவது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. செ. முத்துசாமி, திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. க. மீனாட்சிசுந்தரம் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்துள்ளார்கள்.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநர் நடுநிலைப் பள்ளிகளிலுள்ள எட்டாம் வகுப்பை நீக்கி உயர்நிலைப் பள்ளியில் வைக்க வேண்டும் என்று நடவடிக்கை எடுத்து வருவதால் 6,000 நடுநிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும்

தமிழ்நாடு சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS